# திருக்குறளின் இன்பத்துப்பாலும் பேரின்ப விளக்கமும்

முனைவர் த. மைக்கேல்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஊரீசு கல்லூரி, வேலூர்

இன்பம் என்பது ஒருவர் தன் புலன்களால் ஒரு பொருளை உணர்ந்து அப்பொருளின் உணர்வு மனதிற்கு மகிழ்ச்சியைத் தருவது இன்பம். ஒருவர் உணர்ந்த இன்பத்தை, வேறொருவருக்கு விளக்குவது கடினம். உதாரணமாக, மாங்கனியினை உட்கொண்டவர் பெற்ற இன்பம், வேறொருவர் அறிய வேண்டுமென்றால், அவரும் அம்மாங்கனியினை உட்கொண்டால் தான் அவருக்கு அப்பழத்தின் சுவை தெரியும்.

உண்மையான இன்பம் அல்லாத சிற்றின்பத்தையே இன்று நாம் இன்பம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றோம். மேலும் துன்ப நீக்கத்தையே இன்பமென்று நினைப்பவர்களும் உண்டு. உதாரணமாக, தண்ணீர் தாகத்தின் போது தண்ணீரைக் குடித்ததையோ, காலைக்கடனை கழிப்பதையோ இன்பமென்று சொல்ல முடியாது. இது துன்ப நீக்கமாகும்.

**சிற்றின்பம்**

ஆன்மிக அன்பர்களும் ஆன்மிகத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும் சிற்றின்பம், பேரின்பம் என்னும் வார்த்தைகளை அடிக்கடி சொல்லக் கேள்விப்பட்டிருப்போம்.

மனிதன் தன் உடலை வளர்ப்பதற்கும், உடலின் ஐம்புலன்களின் நுகர்விற்கும் தன்னை ஈடுபடுத்திப் புறப்பொருள்கள் மூலமாகப் பெறுகின்ற இன்பம் சிற்றின்பம் எனலாம். இச்சிற்றின்பம் அளவுடையது, முடிவுடையது, நிலையற்றது. உடலின் சக்தியை இழந்து பெறுகின்ற மகிழ்வு சிற்றின்பமாகும். பிறரைத் தன் சுயவிருப்பத்திற்கு பயன்படுத்துவதும், பயன் கருதி பிறருக்கு உதவி செய்வதும் சிற்றின்பமாகும். மேலும் உடலுடன் தன் மனதை இணைத்து பெறுகின்ற இன்பம் சிற்றின்பமாகும்.

**திருக்குறளின் இன்பத்துப்பால்**

தலைவன் தலைவியின் அழகைக்கண்டு அவளை மோகினியா, தேவதையா, வான்மதியா, வானகத்து தாரகையா, மண்ணில் வந்த வெண்ணிலவா, மயிலா அல்லது மானுடப் பெண்ணா என்று அவன் நெஞ்சம் அவளின் அழகில் மயங்கி நிற்கின்றது; என்றாலும், அவள் தன்னை ஏற்றுக்கொள்ளும் அளவில் தான் இருப்பதாக எண்ணி அவளிடம் இன்பம் துய்க்க ஆசைப்படுகின்றான். அவளைத் தொடர்ந்து பின்பற்றித் தன்னை ஏற்றுக்கொள்கின்ற சம்மதத்தை அவளிடம் பெறுகின்றான். தலைவி ஆடவனைக் கண்டு மறைந்து சென்று காலம் கடத்தி, பிறகு இவன் தன்னை மறந்துவிடுவானோ என்று எண்ணித் தலைவனுக்கு உடன்படுகிறாள். தலைவனும் தலைவியும் களவுவாழ்க்கையில் ஈடுபடுகின்றனர். ஊரார் பழிக்கின்றனர். ஊர் பழித்தாலும், புறம் கூறினாலும் தலைவன்தான் என் காதலன், தலைவன்தான் என் கணவன் என்று அவனுடன் உடன்போக்கு மேற்கொள்கிறாள். இருவரும் இல்லற வாழ்வில் இன்பம் பெறுவதும், தலைவன் பொருளுக்காக வெளியூர் சென்றதால் தலைவி அவனை நினைத்து மனதிற்குள் இன்பம் பெறுவதும். தலைவன் தலைவியை நினைத்து மகிழ்வதும் திருக்குறளின் இன்பத்துப்பாலில் காணமுடிகிறது.

தலைவன், தலைவியை நினைக்கவோ, விரும்பவோ இல்லை, என்றாலும் தலைவி தலைவனை பலமுறைக் காண்பது கூட தலைவியின் உள்ளத்துக்கு இன்பம் என்பதை,

> **“குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்
> பெருந்தேன் கண்ட விருக்கை முடவன்
> உட்கைச் சிறுகுடையை கோலிக் கீழிருந்து
> சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
> நல்கார் நயவாராயினும்
> பல்காற் காண்டலு முள்ளத்துக் கினிதே”**[1]

என்று, முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட உவமை குறுந்தொகைப் பாடலில் காணமுடிகிறது. தலைவன் பரத்தையை நாடிச்செல்கிறான் என்பதை உணர்ந்த தலைவி, 'பரத்தையர் என் காதலரைக் கூடினால் கூடக்கிடைக்காத இன்பம் நான் அவரைக் காண்பதாலேயே கிடைக்கிறது' என்கிறாள்.

திருவள்ளுவர் இதனை மலரினும் மெல்லியது காமம் காதல் என்பதை வலியுறுத்த (வெளிப்படுத்த) உடலைவிட உள்ளத்தையே அதிகம் விரும்பக் கூடியது காதல் என்பதற்கு,

**"மலரினும் மெல்லியது காமம் சிலரது**
**செவ்வி தலைப்படு வார்"**[2]

என்று, காம இன்பம் மலரைவிட மென்மையானது. இன்பத்தை அனுபவிக்கக் கூடிய இருவர் அதற்கேற்ற இடமும் காலமும் பொருளும் பெற்று அவ்வின்பத்தை நுகர வேண்டும். காமத்தின் மென்மையான இயல்பு தன்மையை உணர்ந்து இன்பம் பெற்றவர் ஒரு சிலரே என்கிறார். அந்தச் சிலருள் குறுந்தொகைத் தலைவியும் ஒருத்தி என்று பாடல் வழியே அறியமுடிகிறது. ஒரு தலைவன், தான் முன்பு தலைவியுடன் சேர்ந்து மகிழ்ந்திருந்த இன்பத்தை நினைத்து நினைத்து மகிழலாம். அந்த இன்பம் தீராத இன்பம் எனக் கூறுகிறார்.

**"உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்**
**கள்ளினும் காமம் இனிது"**[3]

என்றும்,

**"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்கில் காமத்திற் குண்டு"**[4]

என்று தலைவியை நினைத்த அளவிலேயே மனதிற்கு இன்பம் தருவதும், கண்ட அளவிலேயே மனம் மகிழ்ச்சிப் பெறுகிற இரு தன்மைகளும் காமத்திற்கு உண்டு. ஆனால் கள்ளின் இன்பம் ஒரு சில மணிநேரம் மயக்கம் தந்து உடலுக்கு கேட்டினைத் தரும். எனவே கள்ளின் இன்பத்தைவிடக் காமத்தின் இன்பம் இனிதானது என்கின்றார். இந்த இடத்தில், திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மதுவைத் தடை செய்யவேண்டும் என்ற விழிப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளார்.

**மடிந்து போகிறவனுக்கு மதுபானத்தையும், மனங்கசந்தவனுக்கு திராட்சை ரசத்தையும் கொடுங்கள்.**[5]

என்று திருவிவிலியம் கூறுகிறது. எனவே மது குடித்தால் உடலுக்குக் கேடு உண்டாகி மரணமடைவான் என்பதை அறியமுடிகிறது.

**சிற்றின்ப உதாரணம்**

ஒரு பொருளை மெய்த்தொடுவதால் மனம் உணர்வது இன்பம். ஒரு பொருளை வாயின் மூலம் சுவைத்ததால் பெறுகின்ற இன்பம், ஓர் அழகான காட்சியைக் கண்டதால் இன்பம், நல்வாசத்தை மூக்கு நுகர்ந்தால் இன்பம், நல்லிசையை காதால் கேட்டதால் இன்பம், இப்படி ஐந்து புலன்கள் மூலமாக மனம் மகிழ்வு பெறுவது இன்பம் என்கிறோம்.

மல்லிகைமலரின் வாசத்தை மூக்கு நுகர்ந்ததால், அது மனதிற்கு இன்பத்தை தருகின்றது. மல்லிகைமலர் மூக்கு என்னும் ஒரு புலனின் மூலம் மட்டும் இன்பத்தைத் தருகின்றதாக உள்ளது. ஒரு புலனுக்கு இன்பம் தரும் ஒரு பொருள், வேறொரு புலனுக்கும் இன்பம் தந்தால் அது உயர்ந்த இன்பமாகும். இதுபோல் மூன்று புலன்களுக்கும், நான்கு புலன்களுக்கும் இன்பம் தரும் பொருள்களும் உண்டு.

உலகத்திலே ஒரே ஒரு பொருள் தான் ஐந்து புலன்களுக்கும் இன்பம் தரும். அதுதான் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் தருகின்ற இன்பம். இதனை,

**"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள"**[6]

என்று, கண்ணால் கண்டும், செவியால் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் மோந்தும், மெய்யால் தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலன்களின் இன்பங்களும் ஒளிப் பொருந்திய வளையல்

அணிந்த இவளிடத்தில் உள்ளன என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். திருமணமானவர்கள் இல்வாழ்க்கையின் மூலம் இவ்வின்பத்தைப் பெற்றிருப்பர். இப்படி ஐந்து புலன்களும் இன்பம் பெறுவதால் இதுதான் இன்பத்திற்குள்ளே உயர்ந்தது. இந்த இன்பம்தான் சிற்றின்பம் என்று குறிப்பிட்டார்கள்.

இந்த இன்பத்தை ஏன் சிற்றின்பம் என்றார்கள் என்றால், ஓர் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் தங்கள் வாழ்நாள் முழுவதும் இன்பத்தைக் கொடுக்க முடியாது. நீடித்து நிலைக்காமல் குறிப்பிட்டக் காலத்திற்கே உரியது. இருவரும் நிலைத்தவர்களாக இல்லாமல் மடிந்துவிடுகிறார்கள் (மரணித்து விடுகிறார்கள்). எனவே ஆணும் பெண்ணும் தொடர்ந்து இன்பத்தைக் கொடுக்கவோ, வாங்கவோ முடிவதில்லை, இதனால் இது சிற்றின்பம்.

**பேரின்பம்**

மனிதன் தன் உடல் உழைப்பு மூலமாகவும் மனதின் இரக்கக் குணத்தோடு உண்மையாகவும், தூய்மையாகவும் பயன்கருதாமல் பிறருக்கு அர்ப்பணிப்போடு உதவி செய்வதும், கொடுத்து மகிழ்வதும் பேரின்பம் என்பர். இப்பேரின்பம் அகத்தின் மூலமாய் பெறுவது, அளவற்றது, நித்தியமானது, சக்தியாய் மாறி மரணத்தை வெல்வது பேரின்பம் எனலாம். மேலும் உயிரோடு மனதை இணைப்பதும், இவ்வுலக வாழ்வில் துன்ப அனுபவம் பெற்று அமைதியையும் ஆனந்தத்தையும் நித்தியமாகப் பெறுவது பேரின்பமாகும்.

**பண்புகள்**

பேரின்பத்துக்குரிய பண்புகளைப் பற்றி எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை கூறும்போது,

**“என்ம னக்கினி யாய்சரு வேசுர நேசம்**
**நன்மை நற்குண நன்னடை நன்மனச் சான்று**
**தன்ம பாலனம் தயையன்பு சாந்தமென் றினைய**
**பன்ம ணித்திரள் புரைகுண நிதிகளைப் பாராய்”[7]**

அன்பான தோழனே! இறையன்பு, நன்மை, நற்பண்பு, நற்செயல்கள், நல்மனச் சான்று, அறத்தின் ஆட்சி, இரக்கம், அன்பு, சாந்தம் என்னும் உயர்ந்தபண்புச் செல்வக்குவியல்களைப் பார் என்று கிறிஸ்தியான் நம்பிக்கை என்னும் நண்பனுக்கு கூறுகிறான். மரணம் என்னும் ஆற்றை நாம் கடந்து தூய்மை மிகுந்த மறுகரையைச் சேர்ந்தால் விண்வீட்டுப் பேரின்பம் கிடைத்திடும்.

மகாபாரதக் கதையில் கண்ணன் ஒருமுறை பஞ்சபாண்டவர்களில் சிறியவனான சகாதேவனைப் பார்த்து, உன் உள்ளத்தில் உயிர் ஆதாரமாய் கருதியுள்ள உண்மையை நீ மறைக்காமல் சொல்ல வேண்டும் என்று கேட்கிறான். பல கலைகளைக் கற்று, வாய்மையே எனக்குத் தாய், தருமங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்தது சத்தியமே என்று எப்பொழுதும் நேர்மையுள்ள நல்ல பண்புகளைப் பெற்றிருந்த சகாதேவன் கீழ்வருமாறு கூறுகிறார்.

**ஒருமொழி அன்னை வரம்பிலா ஞானம்**
**உற்பவ காரணன் என்றும்**
**தருமமே துணைவன் கருணையே தோழன்**
**சாந்தமே நலனுறு தாரம்**
**அரியதிண் பொறையே மைந்தன் மற்றிந்த**
**அறுவரும் அல்லது ஆர் உறவென்று**
**இருவரில் இளையோன் மொழிந்தனன் தன்பேர்**
**இதயமா மலர்க்கிடை எடுத்தே[8]**

என்று தான் பின்பற்றிவந்த உயர்ந்த ஒழுக்கங்களைக் கூறுகின்றார். இங்கு ஒரு மொழி என்பது சத்தியத்தைக் குறிப்பிடுகிறார். வாய்மையே எனக்குத் தாய் என்றும், ஞானம் - தந்தை என்றும், சாந்தம் - தாரம் என்றும், பொறுமை - மைந்தன் என்றும், தருமம் - துணைவன் என்றும், கருணை - தோழன் என இப்பண்புகளை உறவுகளாக மனதில் கொண்டு, அறங்களில் சிறந்தது வாய்மையே எனப் போற்றி வாழ்ந்து வந்துள்ளான்.

**தவம்**

புசுண்டர் என்பவர் தெளிந்தத் தத்துவ ஞானியாகவும் சிறந்த யோகச் சித்தராகவும் தவம் செய்கின்றவர்களில் இவரை விஞ்சியவர் எவரும் இல்லை என்னும் அளவில் நிலையான உடலோடு நீண்ட காலம் வாழ்ந்திருக்கின்றார். தமது யோகக் காட்சியால் மூன்று கால நிகழ்ச்சிகளையும் உணர்ந்து தெளிவாக வெளிப்படுத்தி வந்தார். இவர் இமயமலைச் சாரலில் தவம் இருந்த பொழுது 'விசிட்டமுனிவர் ஒருமுறை நேரில் கண்டு வணங்கி நரை திரை மூப்பின்றி நீண்ட காலமாய் வாழ்ந்து வருகிற மருமத்தைக் குறித்து கேட்டதற்கு கீழ்வருமாறு கூறுகிறார்.

**"எனதுமனம் பிராணசமா தியினால் சொன்ன**
**இவ்ஒழுங்கால் நின்மல தத்துவத்தே என்றும்**
**தனியிடர்தீர் நெறியிதுவாம் இந்த நோக்கம்**
**தனைப்பற்றிச் சென்றதுமேல் வருவது எண்ணேன்**
**நனிநிகழ்கா லத்தியல்பின் நண்ணுகின்றேன்**
**நான் இது பெற்றேன் பெறுவது இதுவென்று எண்ணேன்**
**முனிவரனே அதனாலே நோய்ஒன்று இன்றி**
**முடிவறுநீ டுயிர்பெற்றேன் மோகம் அற்றேன்"** [9]

என்று புசுண்டர் இறவாத வாழ்க்கை வாழ்ந்து முடிவில் பிறவித்தீர்ந்து பேரின்பநிலையை அடைந்துள்ள உண்மையை இக்கவிதை மூலம் அறிந்து கொள்ளுகிறோம். தவம் செய்வதால் மனம் புனிதமாகின்றது. துன்பம் எல்லாம் நீங்கி ஒப்பில்லாத பரமனோடு அந்த ஆன்மா இன்பத்தில் மூழ்கி இன்பமயமாகின்றது என்பதை இவருடையத் தவவாழ்வு தெளிவாக்கியுள்ளது. கடவுளை நோக்கித் தவம் மேற்கொள்ளும் ஆற்றலால் மரணத்தையும் அல்லது எமனையும் வெல்லலாம் என்று அறியமுடிகின்றது. இப்படியும் பேரின்ப நிலையை அடையலாம்.

திரைப்படப் பாடல்களில் தத்துவங்களை வெளிப்படுத்திய கவிஞர் கண்ணதாசன் பேரின்பத்தைப் பற்றி 'கவலை இல்லாத மனிதன்' என்ற படத்தில்,

**"அன்னையின் கையில்**
**ஆடுவதின்பம்**
**கன்னியின் கையில்**
**சாய்வதுமின்பம்**
**தன்னையறிந்தால் உண்மையில்**
**இன்பம்**
**தன்னலம் மறந்தால் பெரும்**
**பேரின்பம்"**

என்று, கடவுள் பிற உயிர்களுக்கு கொடுக்காத ஆறாவது அறிவாகிய பகுத்தறிவை நமக்கு கொடுத்துள்ளார். அவ்வறிவைக் கொண்டு தன்னையறிந்து தன்னலம் துறந்து பிறருக்குத் தொண்டு செய்வதால் பேரின்பம் பெறலாம்.

**"ஆசைத் தொடர்புகள் எல்லாம் அவமான**
**நீசத் தொடரே நிலையழியின் - பேசரிய**
**பேரின்ப முத்தியுனைப் பேணி எதிரேந்தி**
**ஓரின்பம் ஆக்கும் உவந்து"**[10]

'உயிர் உடலோடு கூடியபோதே பசி குடலோடு கூடியது' என்பதற்கினங்க துன்பங்களுக்கெல்லாம் மூலவித்தாய் உள்ளதான விருப்பம், இச்சை, ஆசை என்பனவும் மேலும் வயிற்றுப் பசியை ஆற்ற மனம்போகும் வழியெல்லாம் சென்றால் துன்பம் மிஞ்சுமே தவிர நன்மை தராது. மனஆசையை முற்றும் அழித்தால் என்றும் அழியாத பேரின்பத்தைப் பெற்று மகிழ்ந்திருப்பாய் என்று கூறப்படுகிறது.

**"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்"**

என்று, ஒருபோதும் நிறைவடையாத ஆசையை முற்றும் அகற்றினால் என்றும் குறையாதப் பேரின்பம் பெறலாம் என்று கூறுகின்றார். (ஆராத அவா அறின் பேராத பேரின்ப வீடு நேராம்).

**"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்"**

தமிழறிஞர் சொல்வார்கள் ஐந்து புலன்களையும் வெல்ல முடியாது. ஆனால் அடக்க முடியும் என்று. எனவே ஐந்து புலன்களையும் அடக்கி, நல்லொழுக்க நெறி நின்று வாழ்பவர்கள் எப்பொழுதும் ஆனந்தம் கொண்டிருக்கிற பேரின்பத்தைப் பெறுவர். இப்பேரின்பத்தை உண்டவர் உணர்வாரே தவிர, அவர் அதை விட்டு வெளியே வந்து அதை உணர்த்த முடியாது என்பதை,

**"கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்"**

என்ற முதுமொழியும் துணைநிற்கின்றது.

பொதுவாக அறம் என்பது செய்ய வேண்டியவற்றைச் செய்வதும் செய்யக்கூடாததைச் செய்யாமல் இருப்பதும் தான் அறம். பேரின்பத்தைப் பெற பல நல்லபண்புகள் நமக்கு துணை நிற்கின்றன. அவற்றில் ஒன்று அறம் செய்வது. நமக்கு அறம் செய்யத்திறன் இருக்கும்பொழுது நாம் செல்கின்ற இடமெல்லாம் அறத்தை ஊக்கமாய் செய்யவேண்டும் என்பதனை,

**"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாஞ் செயல்"**

என்று கூறுகிறார். செல்வத்தைப் பெற்ற நாம் அறம் செய்யாமல் தவிர்த்தால், நம்முடைய செல்வமானது, இரவில் மேகங்களுக்கிடையில் மின்னல் தோன்றி மறைந்து விடுவதுபோல், நாம் பெற்ற செல்வமானது இருந்த இடம் தெரியாமல் நம்மை விட்டுச் சென்றுவிடும் என்று நாலடியாரில் பார்க்க முடிகிறது. மேலும்,

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி"**

என்று பொருள் பெற்ற ஒருவன் ஏழை எளியவர்களின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அப்படி அவன் வறியவர்களுக்கு உதவுவதால், தனக்குப் பிற்காலத்தில் பொருளைச் சேர்த்து வைக்கிறான் எனப் பேரின்பத்தை அடையும் வழியினைச் சுட்டுகிறார்.

திருவிவிலியத்தில் லூக்கா 16:19-31இல் ஐசுவரியவனாகிய 'நிர்விசாரி' தன் செல்வத்தைத் தனக்கு மட்டும் ஆடம்பரமாகச் செலவு செய்துக்கொண்டும் பாவவழியில் வாழ்கிறான். ஏழைகளுக்கு உதவும் குணமற்றவனாகவும், தன் வீட்டை நோக்கிவரும் வறியவர்களை விரட்டுபவனாக இருக்கின்றான். இப்படிப்பட்ட குணம் கொண்ட ஐசுவரியவான் சொல்வதாகக் கீர்த்தனை ஆசிரியர் சங்கை சி.பி. ஞானமணி அவர்கள் 'நிர்விசாரி கவிதை'யில்,

**"வேத போதனையோதுறான்**
**விண்ணினின்றுளி வந்த ஞானிபோலேந்தனோடுகுலா**
**வுறான் சாதமோர் பருக்கை கொடாதிரும்"**

என்று அவன் சொல்வதாகக் குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட பண்பினைக் கொண்டு வாழ்ந்த அவன் மரிக்கிறான். இவன் வீட்டை நோக்கி வந்த, கடவுளையே எண்ணிவாழ்கின்ற வறியவனான ஏழை லாசருவும் மறிக்கிறான். ஏழை லாசரு விண்ணுலக வாழ்வைப் பெற்று, கடவுளின் ஆசீர்வாதங்களைப் பெற்ற ஆபிரகாமின் மடியில் படுத்திருக்கின்றான். ஐசுவரியவானாகிய நிர்விசாரியோ நரகத்திற்குத் தள்ளப்படுகின்றான். இப்படிப்பட்ட செல்வந்தர்களை நாலடியார் அறத்துப்பால் வெண்பாவில் குறிப்பிடுகிறார்.

**"உண்ணான ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்**
**துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே**
**வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ**
**இழந்தான் என்றெண்ணப் படும்"**[16]

தன்னுடையச் செல்வத்தைத் தானும் உண்ணாமல், பிறருக்குத் தருமம் செய்து நன்மதிப்பும் பெறாமல், தன் உறவினர்களின் துன்பம் நீங்கும்படி அவர்களுக்கு உதவாமல், ஏழை எளியவர்களான வறியவர்களுக்குக் கொடுக்காமல் இருப்பவன் புகழும் புண்ணியமுமாகிய பயன்களை இழந்தான் என்று குறிப்பிடுகிறார். புகழும் புண்ணியமுமாகிய பேரின்பத்தைப் பெற, நம்மால் இயன்றவரை ஏழை எளியோருக்கும், பசியுள்ள வறியவர்களுக்கும் உதவவேண்டும். நாம் செய்த அறம் நமக்கு

பேரின்பத்தைப் பெற்றுத் தருவதை, திருவிவிலியம் மத்தேயு 25:40இல் **“அதற்கு ராஜா பிரதியுத்திரமாக மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.”** இதை நாம் பிதாவாகிய கடவுள் நம்மிடையே கூறுகிறார் என்று உணரவேண்டும்.[17]

நிலையானப் பேரின்பத்தைப் பெறுவதற்கு நாம் தகுதியுடையவர்களா என்று செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிப்பது போல நன்மைச் செய்கிறவர்களை வலது புறமாக நிறுத்தி, **‘பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தை தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன். எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள் வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்.’**[18]

எனவே, உலகப்பிரகாரமான தாகம் உண்டு. சிலரது தாகம் சிற்றின்பமாயிருக்கிறது. ஒரு சில மணி நேரங்கள் மகிழ்ச்சியைத் தரும். **‘இவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பமொன்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்தது. உங்களோடே விருந்துண்ணுகையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறார்கள்.’**[19]

உலக மயக்கங்களில் துள்ளி ஓடுகின்ற மனதை மெல்ல மெல்ல நிறுத்தி தன் உண்மை நிலையை மறந்துவிடாமல் கடமைகளாகிய அறம், தவம், தானம், தருமம், ஞானம், துறக்கம் இவைகளை பின்பற்றி பிறஉயிர்களுக்கு துன்பம் தராமல், ‘தாயும் கருணையும் கடவுளும் ஒன்று’ என்பது போல் இரக்கமும் கருணையும் கொண்டு தன்னலமற்று வாழ்ந்தால் பரமனின் பேரின்பத்தைப் பெறலாம்.

**சான்றெண் விளக்கம்**


1. குறுந்தொகை, பா.எ.6
2. திருக்குறள், 1289
3. திருக்குறள், 1201
4. திருக்குறள், 1281
5. திருவிவிலியம், நீதிமொழிகள் 31:6
6. திருக்குறள், 1101
7. இரட்சணிய யாத்திரிகம், பா.எ.3460
8. பாரதம், பழம் - 20, (திருக்குறட்குமரேச வெண்பா, பாகம்-4), ப.1431
9. திருக்குறட்குமரேச வெண்பா, பாகம்-4), பக்.1283-1284
10. தருமதீபிகை, பா.எ.997
11. திருக்குறள், 370
12. திருக்குறள், 6
13. திருக்குறள், 33
14. திருக்குறள், 226
15. ஜான் ஜெயானந்தம், ந. இலக்கியப் புதையல், நிர்விசாரி கவிதை, ப.128
16. நாலடியார். 9
17. திருவிவிலியம், மத்தேயு 25:40
18. திருவிவிலியம், மத்தேயு 25:35-36
19. திருவிவிலியம், 2 பேதுரு 2:13